( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC. No. 79/2022

Name :பரிமளா **P.W.**2(LW2)
Father/Husband Name :பிரசன்ன கிருஷ்ணன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 25.07.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2024.

**முதல் விசாராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் ராயப்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறேன். 25/02/2018 தேதி சுமார் 2 மணியளவில் கோவளம் பீட்சிக்கு சென்றபோது எனது கணவருக்கு சொந்தமான TN 01AQ3386 Spliendor வாகனத்தில் நானும் எனது கணவரும் சென்று மீன்வளத்துறை அலுவலகத்திற்க எதிரே வாகனத்தை நிறுத்திவிட்டு சைட் லாக் போட்டு மீண்டும் வந்து 3.30 மணியளவில் பார்த்தப்போது என்னனுடைய கணவருடைய வாகனம் அங்கு இல்லை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. 26/02/2018 தேதி காவல் நிலையம் சென்று என் கணவர் புகார் கொடுத்தார்.

2. 21/04/2019 அன்று காவல் நிலையத்தில் இருந்து வாகனத்தை திருடிய நபர்களை கண்டுபிடித்துவிட்டோம் என்றும் வாகனத்தையும் கண்டுபிடித்துவிட்டோம் என்று தெரிவித்தார்கள். போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை –** எதிரிகள் ஆஜர் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் இல்லை போதிய அவசாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை அதனால் இத்துடன் முடிக்கப்படுகிறது.

Sd/- N.Anupriya, 25.07.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TRP.

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC. No. 79/2022

| | | |
|---|---|---|
| Name | : பிரசன்ன கிருஷ்ணன் | **P.W**.1 (LW1) |
| Father/Husband Name | : கோபால கிருஷ்ணன் | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 25.07.2024 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2024.

**முதல் விசாரணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் ராயப்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறேன். 25/02/2018 தேதி சுமார் 2 மணியளவில் கோவளம் பீட்சிக்கு சென்றபோது என்க்கு சொந்தமான TN 01AQ3386 Spliendor வாகனத்தில் நானும் எனது மனைவியியும் சென்று மீன்வளத்துறை அலுவலகத்திற்க எதிரே வாகனத்தை நிறுத்திவிட்டு சைட் லாக் போட்டு மீண்டும் வந்து 3 மணியளவில் பார்த்தப்போது என்னனுடைய வாகனம் அங்கு இல்லை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை 26/02/2018 தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.(**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் கொடுத்தபுகாருக்கு மனு ரசீது வழங்கினார்கள்.

2. 21/04/2019 அன்று காவல் நிலையத்தில் இருந்து வாகனத்தை திருடிய நபர்களை கண்டுபிடித்துவிட்டோம் என்றும் வாகனத்தையும் கண்டுபிடித்துவிட்டோம் என்று தெரிவித்தார்கள். காவல் நிலையம் சென்றபோது போலிஸ்சார் விசாரித்தார்கள் வாகனத்தையும் காட்டினார்கள் நான் அடையாளம் காட்டினேன். திருடிய நபர்களில் இரண்டு நபர்களை கைது செய்ததாக கூறி என்னிடம் அவர்களை அடையாளம் காட்டினாாகள் அந்த இரண்டு நபர்கள் இந்நீதிமன்றத்தில் உள்ளார்கள் அவர்கள் ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்த நபர் மற்றும் அவருக்கு வலது புறமாக நிற்பவரும் ஆவார்கள் ஆனால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. ( **சாட்சி மஞ்சள் நிற சட்டை**

**அணிந்த நபர் பிரபாகரன் என்பவரையும் அவருக்கு வலது புறமாக நிற்பவர் எதிரி பார்த்திபன் என்பவர்களை அடையாளம் காட்டினார் )**

3. பிறகு மீண்டும் காவல் நிலையத்தில் மற்றொரு நபரை கைது செய்ததாக தகவல் கொடுத்தார்கள். தேதி எனக்கு நியாபகம இல்லை. காவல் நிலையத்திற்கு சென்றபோது மூண்றாவது நபரையும் அடையாளம் காட்டினார்கள். அவர் பெயர் எனக்கு தெரியாது. **(சாட்சி எதிரி மேகனாதன் என்பவரை அடையாளம் காட்டினார்)** நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது வண்டியை இடைக்கால உததரவாக பெற்று கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை –** எதிரிகள் ஆஜர் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் இல்லை போதிய அவசாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை அதனால் இத்துடன் முடிக்கப்படுகிறது.

Sd/- N.Anupriya, 25.07.2024
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct
DM cum JM/TRP.